**Anode Fabricators Pvt Ltd**
*Innovation In Inert Metals*
MMO, Platinized Ti & Nb Anodes
#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 2278 1362 Email: info@tianode.com Web: www.tianode.com

# INTER - ORGANIZATIONAL NEWSLETTER – JANUARY 2007

## MAN OF THE MONTH



**MR. S. SIVA SUBRAMANIAN**
Marketing Executive

## FORECASTING 06-07

| | |
|---|---|
| Turnover | : 200% ↑ |
| Employment | : 5% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Rejection Rate | : 100% ↓ |

## TESTIMONIALS

- **Customers:**

| | |
|---|---|
| Up to November 06 | : 210 Nos |
| Up to December 06 | : 212 Nos |

- **Performance: December 06**

| | |
|---|---|
| Turnover growth | : 103.31% |
| Employment growth | : 01.39% ↑ |
| 100% Attendance | : 10.96% |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | – Director |
| Mrs. J. Vanajambika | – Director |

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | - CEO. |
| Mr. RS. Thangappan | - GM. |
| Mr. R. Vijaya Sai | - QA. |
| Mr. M. Suyambu | - Planning. |
| Mr. T. Amaladhas | - Plating. |
| Mr. T. Ramesh | - Purchase. |
| Mr. N. Murugan | - Production. |
| Mr. RM. Ravi Chandran | - Marketing. |
| Mr. C. Sounder Suresh | - Stores. |
| Mr. C. Babu | - Finance. |

## ACHIEVEMENT




# ஆபத்து இல்லா அளவுகோல்

உயர்ந்த பண்புகள், உயர்ந்த எண்ணங்கள் ஒரு மனிதனை தெய்வமாக்கும். ஒழுக்கம், கல்வி, ஞானம் போன்ற ஆயுதங்களால் தன்னில் தோன்றிய தவறுகளை – தீய உணர்வுகளை வெட்டி வீழ்த்தினால்தான் ஒருவன் ஆபத்து இல்லா அளவுகோலாக மாற முடியும். பொறுமை, தியாகம், மன்னித்தல் போன்ற தேவ சம்பத்துக்களை பெற்றவர்களே மனிதர்களாக மாற முடியும்.

எந்த விஷயத்தில் முடிவு எடுக்கும் போதும் பிடிக்கும், பிடிக்காது என்பது சரியான அளவுகோலே அல்ல. எது சரி? எது தவறு? எது தீமை? எது நன்மை? என்று முடிவு செய்து, நன்மையானதை செய்வது – சரியானதைச் செய்வது என்ற முடிவுக்கு வந்தால் வாழ்கை பாதுகாப்பாக இருக்கும். இதுவே ஆபத்து இல்லாத அளவுகோல்.

தொகுத்தளித்தவர்
Ms. P.E. Nancy

********

# கையில் ஒரு எமன்

சமீபத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையில் பார்த்த கேலிச்சித்திரமொன்று சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கும் உரியதாக இருந்தது. அச்சித்திரத்தின் ஒருபுறம் செல்பேசியும் இன்னொரு பக்கம் மின் அடுப்பும் வரையப்பட்டிருந்தன. இரண்டையும் ஒரு குழாய் இணைத்திருந்தது. மின் அடுப்பின் மீது வைக்கப்பட்டிருந்த ஒரு கொதிகலனுக்குள்ளிருந்த முட்டையை செல்பேசியிலிருந்து வெளியாகும் வெப்பத்தால் வேக வைக்கும் முயற்சியில் வெற்றி பெற்று ஒருவன் சிரித்துக் கொண்டிருந்தான். இதுதான் அச்சித்திரம். முதலில் இக்காட்சியில் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஏதோ விளையாட்டு என்றுதான் நினைத்தேன். பிறகு தொடர்ந்து அக்காட்சியை அசைபோட அசைபோட குவி ஆடியின் வழியாக சூரிய வெப்பத்தைத் தரையின் மீது வைக்கப்பட்ட தாள் மீது விழச் செய்து தீப்பிடிக்கச் செய்த பள்ளிக்கூடத்துச் சோதனைச் சாலை அனுபவம் நினைவில் மிதந்து வந்தது. ஆடியின் வழியே குவிக்கப்படுகிற வெப்பத்தில் தாள் எரிவது சாத்தியமென்றால் செல் வழியாக குவிக்கப்படுகிற வெப்பத்தில் முட்டை வெந்துபோவதும் சாத்தியமே என்று தோன்றியது.

செல்பேசிகள் ஏற்றுக்கொள்கிற அல்லது வெளிப்படுத்துகிற வெப்பத்தை நாம் உரையாடலின் மகிழ்ச்சியில் கவனிப்பதில்லை. தொடர்ச்சியான உரையாடலின்போது இந்த வெப்பத்தின் அளவு பெருகிக்கொண்டே போகிறது. ஊரையாடல் முடிந்த பிறகு, செவி மடலின் ஓரத்தை நம் விரலால் தீண்டிப்பார்த்தால் அப்பகுதியில் படர்ந்திருக்கும் வெப்பத்தை உணரமுடியும்.

யாரும் யாரையும் அழைக்காதவரையில் செல் கிட்டத்தட்ட ஒரு ஜடப்பொருளைப் போல வைத்த இடத்தில் கிடக்கிறது. அழைப்பின் சமிக்ஞையை அது ஏற்கத் தொடங்கும் முதல் கணத்தில் அதில் உயிர் பற்றிக் கொள்ளத் தொடங்குகிறது. மின் கலங்களின் உதவியால் கைதட்டுகிற பொம்மையை அல்லது வட்டமிடுகிற ரயில்பொம்மையை சற்றே தள்ளி நின்று நாம் இயக்குவதைப்போல அழைப்பின் ஒலியை

... 2

## AWARDS

### PERUNTHALAIVAR K. KAMARAJAR AWARD

1. Mr. K. Murugan, Fitter
2. Mr. T. Raja, Fitter Asst.

Innovation of Automation on pipe cutting machine.

3. Mr. T. Stephan, Welder
4. Mr. P. Satheesh, Welder Asst.

Innovation of Automation on tig welding.

### DR. KALAM AWARD

1. Mr. P. Satheesh, Welder Asst.
   Attended the emergency job.

2. Mr. M. Nagarajan, Fitter Asst.
   Attended the emergency job.

## வாய்ப்பு ஒரு வரம்

மரம்! உதிர்ந்த சருகுகளுக்காக எப்பொழுதும்
ஒப்பாரி வைப்பதில்லை!
புதிய தளிர்களைப் பார்த்தே
பூரிப்படைகின்றது! - அதுபோல
இழந்த வாய்ப்புகளுக்காக
மனதை இழந்து விடாமல்
அரும்பும் வாய்ப்புகளை உள்ளத்தால்
உணர்ந்து புத்துணர்வு கொள்!
உதிர்ந்ததை நினைத்து நினைத்து
மலர்வதைப் பறிக்க மறந்து விடாதே!
ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு அதிசயப் பூ!
மனத்தின் கதவுகளை திறந்து
வைத்திருந்தால் வாய்ப்பின் வாசனையை
நெஞ்சம் அறிந்துகொள்ளும்
முழு வாய்ப்பையும் முழுமையாகப் பயன்படுத்த
ஆற்றல் வெள்ளத்தில் ஆனந்தமாக நீந்து!
செயல்வீதிகளில் நடக்கும்போது உனது வெற்றிச்
சுவடுகள் பதியுமாறு பார்த்துக்கொள்
வாய்ப்பு! அது உனக்குக் கிடைக்கும்
ஒரு வரம். தவ ஞானியைப் போல
வாய்ப்பு வரத்தை உபயோகித்து
உலகத்திற்கு உயர்வு கொடுக்க
உன்னை எப்பொழுதும்
தயாராகவே வைத்துக் கொண்டிரு!
வாய்ப்பு! அது உனக்குக் கிடைக்கும்
ஒரு வரம்!

தொகுத்தளித்தவர்
திருமதி. பத்ம பிரியா

## உலக அமைதி

“நல்லொழுக்கம் இருந்தால் நடத்தையில் அழகு மிளிரும். நடத்தையில் அழகு இருந்தால் குடும்பத்தில் சாந்தி நிலவும். குடும்பத்தில் சாந்தி நிலவினால் நாடு நலம் பெறும். நாடு நலம் பெற்றால் உலகில் அமைதி நிலவும்”.

- டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

சமிக்ஞை அலைகளாக மாற்றி செல் பேசிகளுக்கு உயிர்ப்பூட்டுகின்றன செல் கோபுரங்கள். பொம்மை ரயிலுக்கும் நாம் நிற்கும் இடத்துக்குமான இடைவெளி மிகக் குறைவு என்பதால் அதை இயக்கத் தேவையான சக்தியும் குறைவாக இருக்கிறது. “செல்” கோபுரத்துக்கும் “செல்பேசி”களுக்குமான தொலைவு அதிகம் என்பதால், “செல்பேசி”களை இயக்கத் தேவையான சமிக்ஞை சக்தியும் அதிகமாக இருக்கிறது.

இந்தச் சமிக்ஞை சக்தியின் அளவு இருபது வாட் வரை இருக்கலாம் என்பதுதான் உலகத் தொலைபேசி விதிகளின் பரிந்துரை. துல்லியமான குரல் என்கிற மயக்கத்தை உருவாக்குவதற்கு பல இந்திய நிறுவனங்கள் கிட்டத்தட்ட நாற்பது வாட் வரைக்கும் சமிக்ஞை அலைகளின் சக்தியை அதிகரித்து விடுகின்றன. நம்மால் காண முடியவில்லை என்றாலும், நம் உடலால் உணர முடியவில்லை என்றாலும் ஒவ்வொரு கணமும் அந்த அலைகள் நம்மை ஊடுருவியபடி கடந்து போகின்றன. பேசத் தொடங்கியதும் அந்தச் சக்தியை ஏற்றுக் கொள்கிற தூணாக நம் உடல் மாறி விடுகிறது.

நம் உடலை ஒரு தந்திக் கம்பமாகவும் அலைவாங்கியாகவும், அலைபரப்பியாகவும் மாற்றி நிறுவிய அதிசயத்தின் வழியாகத்தான் எந்த இடத்தில் வேண்டுமானாலும் நின்று உலகப் பரப்பின் வெவ்வெறு மூலைகளில் இருப்பவர்களை எளிதில் அழைக்கவும் பேசவுமான வசதியை நாம் அடைந்தோம். இந்த வசதியை நினைத்துப் பெருமிதம் கொள்வதில் பிழையில்லை. அதேசமயத்தில் இவ் வசதிக்காக எவ்வளவு பெரிய விலையை நாம் கொடுத்திருக்கிறோம் என்று யோசிப்பது அவசியம்.

இந்த மறு யோசனைக்கு நான் கண்ணால் கண்ட இரண்டு சம்பவங்களைக் குறிப்பிடவேண்டும். எனக்கு மிகவும் நெருக்கமான நண்பரொருவர் தனியார் தொலைபேசி நிறுவனத்திற்கு அதன் “செல்”கோபுரத்தை நிறுவிக்கொள்ள தன் தோப்புக்கருகே குறிப்பிட்ட அளவுள்ள இடத்தை வாடகைக்குத் தந்தார். மாதம் ஏழாயிரம் ரூபாய் வாடகை என்றதும் அவர் மனம் இளகிவிட்டது. பிள்ளைகளின் படிப்புச் செலவு, பெற்றோர்களின் மருத்துவச் செலவு என ஏகப்பட்ட நெருக்கடிகளுக்கு நடுவே தவித்துக் கொண்டிருந்த சுமையை அந்தத் தொகை பெரிய அளவில் குறைக்கும் என்கிற நம்பிக்கையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஒரு மாத அளவில் கோபுரம் எழுந்து நின்று இயங்கத் தொடங்கியது. எல்லா நேரங்களிலும் கீச்சுக்கீச்சென்று கத்தித் திரிந்த குருவிகள் திடீரென அந்தத் தோப்பிலிருந்து மாயமாகிவிட்டன. விதம் விதமான பறவைகளின் வருகை திடீரென நின்றுவிட்டது. ஓர் அமாவாசை தினத்தில் படையல் சோற்றை எடுக்க ஒரு காக்கைகூட வராதபோது அவர் திகைத்துவிட்டார். சமிக்ஞை அலைகளின் ஆற்றல் இந்தச் சிற்றுயிர்களை வெகுதொலைவுக்கு விரட்டி விட்டதை உணர்ந்தேன். இது கண்ணுக்குத் தெரிந்த பாதிப்பு. கண்ணுக்குத் தெரியாத வகையில் பூக்களையும், செடிகளையும், கொடிகளையும் எவ்விதத்தில் பாதித்திருக்குமோ தெரியவில்லை, அதை உணர இன்னும் சில ஆண்டுகள் போகலாம். இது ஒரு சம்பவம். ஒரு மழைநாளில் மரத்தடியில் ஒதுங்கிய இரு இளைஞர்கள் தன் “செல்பேசி”யில் வந்த அழைப்பை ஏற்றுப் பேசுவதற்காக “பேசி”யை இயக்கிய தருணத்தில் பேசியின் வழியாக வெளிவந்த சமிக்ஞை அலைகளின் ஆற்றலுடன் இடிமின்னலின் ஆற்றலும் சேர்ந்து இறங்கி அவர்களைத் தாக்கி உயிரை மாய்த்துவிட்டது.

அறிவியல் பத்திரிக்கையொன்றில் படிக்க நேர்ந்த செய்தியொன்றையும் இத்தருணத்தில் குறிப்பிட வேண்டியிருக்கிறது. மனித உடலில் மூளைப் பகுதியைச் சுற்றி பாதுகாப்புக் கோட்டையாக ஒரு சவ்வு மூடியுள்ளது. உயிர்மச் செறிவால் ஆன அந்த உள்வரித்தாள் சவ்வு, மூளைக்கு ரத்தத்தைக் கொண்டு செல்லும் அணுக்களின் பயணத்துக்கு எவ்விதமான இடையூறும் நேராத வகையில் பாதுகாப்பு வழங்குகிறது. இவற்றின் பெயர் "என்டோதெலியல்" அணுக்கள்.

மேலும் மூளையைப் பாதிக்கக்கூடிய எந்தப் பொருளும் உள்ளே நுழைந்துவிடாத வகையில் ஒரு தடுப்பு அரணாகவும் விழங்குகிறது. மகத்தான இந்த இரண்டு பணிகளை மேற்கொண்டிருக்கும் இந்தச் சவ்வு, மனித மூளைக்கு இயற்கையே வழங்கியிருக்கிற கவசம், இக்கவசத்தை ஊடுருவி "என்டோதெலியல்" அணுக்களை செல்பேசிகளிலிருந்து வெளிப்படும் சமிக்ஞை அலைகளின் சக்தி மிகவும் தீவிரமாகத் தாக்குகிறது. இடது செவியைவிட வலது செவியின் ஓரமாக வைத்துப் பேசும்போது இந்தத் தீவிரம் இன்னும் கூடுதலாகிறது.

காக்கைகளையும், குருவிகளையும் இன்னும் சின்னச்சின்ன சிற்றுயிர்களையும் ஓடஓட விரட்டும் சமிக்ஞை அலைகளின் பயணம் பசுமையின் செழிப்பை மங்க வைத்து, மனித மூளையின் பாதுகாப்புக் கவசத்தை ஊடுருவிப் பிளந்து தாக்குகிற அளவு வரைக்கும் வந்தாகிவிட்டது. இப்போது நாம் என்ன முடிவை எடுப்பது?

செல்பேசி ஓர் அறிவியல் சாதனை என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவசரத்துக்கு அதைப் பயன்படுத்துகிற கட்டாயத் தேவை நமக்கு உள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. அதைப் பயன்படுத்துவதில் சிறிதளவாவது ஒரு வரை முறையை வகுத்துக் கொள்வது மிகவும் முக்கியம். வரைமுறையற்ற பயன்பாடு என்பது ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, மனிதரையே கடிக்க வருவதுபோல, பறவையை அலைய வைத்து, பசுமையைத் தடுமாற வைத்து, பிறகு மானுடரையும் தடுமாறி அலைய வைத்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. அல்லும் பகலும் சாலையோரங்களிலும் வீட்டு வாசல்களிலும், "பால்கனி"களிலும், ஜன்னல் ஓரத்திலும், பேருந்து நிறுத்தங்களிரும், பிரயாண சமயங்களிலும் இடைவிடாமல், ரகசியமாகவோ பேசிக்கொண்டே இருக்கிறவாகளைப் பார்க்கும் போதெல்லாம் தவிர்க்கவியலாமல் ஓர் அச்சம் நெஞ்சில் பிறக்கிறது. ஏதேனும் ஒரு வரைமுறையை விதித்துக் கொண்டால் மட்டுமே வர இருக்கிற ஆபத்திலிருந்து தப்பிக்க முடியும்.

தொகுத்தளித்தவர்
திரு. எம்.பி.வி. ஜெயக்குமார்

********

## LIFE

Life is a blank, fill it.
Life is problem, face it.
Life is an equation, balance it.
Life is a challenge, accept it.
Life is a question, answer it.
Life is a success, enjoy it.
Life is a book, read it.
Life is a load, carry it.
Life is a gift, receive it.
Of course,
Life is a love, feel it.

J. Anitha
D/o. D. Jothi

## வாழ்ந்து சாதிப்பது

விதையின்றி கிளை முளைக்க
திசுக்கள் பெற்ற சுதந்திரம் !
மனிதன் உடல் அழிய நோய் தந்தது
கிருமிகள் பெற்ற சுதந்திரம் !
நிலம் அழிய சுனாமி வந்தது
கடல் பெற்ற சுதந்திரம் !
எரிமலையாய் உமிழ்வது
நெருப்பு பெற்ற சுதந்திரம் !
பசும் மலையாய் தோன்றுவது
மலை பெற்ற சுதந்திரம் !
வெள்ளமென நீரை கொட்டுவது
மேகம் பெற்ற சுதந்திரம் !
புயலென வீசி அடிப்பது
காற்றின் சுதந்திரம் !
கொல்லும் விஷத்தை தருவது
பாம்பின் சுதந்திரம் !
விளையும் முத்தை தருவது
சிப்பியின் சுதந்திரம் !
நிலையில்லா மாற்றங்கள் தருவது
காலத்தின் சுதந்திரம் !
இதனூடே வாழ்ந்து சாதிப்பது
மனிதனின் சுதந்திரம் !

ஆக்கம்
ஆர்.எஸ். தங்கப்பன்.

## NEW YEAR `07 CELEBRATIONS





## FUNCTIONAL WISHES

**WISH YOU A HAPPY AND PROSPEROUS**

**NEW YEAR 2007**



**NEW YEAR**
**JANUARY 01**

**POGI**
**JANUARY 14**

**PONGAL**
**JANUARY 15**

**REPUBLIC DAY**
**JANUARY 26**

**MOHARAM**
**JANUARY 30**



Best Wishes by Ti Employees.

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : United Bank of India |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Adviser | : Lr. M.K. Govindan |
| Central Excise | : Mr. Raghavan |

## வாசகர்கள் கவனத்திற்கு...

சிறுகதைகள், துணுக்குகள் கவிதைகள், கட்டுரைகள், மருத்துவ குறிப்புகள் போன்ற படைப்புகள் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

**- Editor**

## BIRTH DAY WISHES



| | |
|---|---|
| Mr. C. Sounder Suresh<br>Asst. Manager Stores | Feb 02 |
| Mr. V. Babu<br>Security | Feb 05 |
| C. Ramya Devi<br>D/o. Bavani | Feb 07 |
| Mr. N. Aghoram<br>F/o. A. Nirmala | Feb 08 |
| Mrs. A. Glory<br>W/o. T. Amaladhas | Feb 14 |
| Master R. Hemnath<br>S/o. R. Jeyanthi | Feb 25 |
| Master S.V. Edwin Jeyakumar<br>S/o. C. Sounder Suresh | Feb 26 |

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே!**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே!!**

**Best Wishes by Ti Employees**

## மூலிகைப் பக்கம்

# வாழைபோல் வாழ வாழை இலையில் சாப்பிடுங்க

நோய் வராமல் தடுத்துக் கொள்ள உணவை எந்தக் கலத்தில் சமைக்க வேண்டும், எதில் வைத்துச் சாப்பிட வேண்டும் என்பதையும் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

தங்கம் - வெள்ளி - வெண்கலம், ஏழைகளின் சொத்தாகிய மண் கலம் ஆகியவற்றில் உணவைச் சமைப்பது மற்றும் இக்கலன்களில் சாப்பிடுவது நல்லது.

வாழைக்கு முதலிடம் : இவற்றில் முதன்மையானது வாழை இலை. உணவை வாழை இலையில் சாப்பிடுவது மிகவும் நல்லது. இலைகளில் வெள் வாழை இலை மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். வாழை இலையில் சாப்பிடுவதால் தோல் தாதுவிற்கு பளபளப்பு உண்டாகும். ஜீரணக் கோளாறுகள் நீங்கும். அளவுக்கு அதிகமான பித்தம் குறையும்.

தங்கம், வெள்ளி... : தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய மூன்றும் நல்லது. மண் கலத்தில் சாப்பிட்டால் காச நோய், ரத்த சோகையால் ஏற்பட்ட நீர்ச் சுரங்கள் நீங்கும். பரம ஏழைகளின் கலன்களாகிய மண் கலங்கள் நோய்களை அகற்றும்.

********

# நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க

'வைகறைத் துயிலெழு' என்பது தமிழ்ச் சான்றோர் வாக்கு. சூரிய உதயத்துக்கு முன்புள்ள நேரம்தான் வைகறை. இந்த நேரத்தில் எழுவதால் ஏற்படும் பயன்களை நம் முன்னோரே கூறியுள்ளனர். அது தற்போது அறிவியல் பூர்வமாகவும் நிருபணமாகியுள்ளது.

முன்னோர் கூற்றுப்படி வைகறையில் எழுந்திருப்போருக்கு 'செரிப்ரோ ஸ்.்.பைனல் .்.புளுயிட்' (Cerebro Spinal Fluid) என்ற பெருமூளைத் தண்டுவட நீர், கலங்கல் இல்லாமல் தெளிவாக இருக்கும். அந்த நீர் தெளிவாக இருப்பதால், மாணவர்கள் அதிகாலையில் பாடங்களைப் படித்தால், மூளையில் தெளிவாகப் பதியும். அன்றைய பணிகளைச் செவ்வனே செய்வதற்குச் சுறுசுறுப்பும் இருக்கும்.

இது மட்டுமல்லாமல், சூரிய உதயத்துக்கு முன் வெளியிலுள்ள காற்று ஓசோன் என்ற சிறந்த பொருளையும் கொண்டிருக்கும். இந்த ஓசோன், உடல் நலத்துக்கு மிகுந்த நன்மை பயப்பதாகும். காக்கும் கடவுளாகிய திருமாலின் கோயில்களில் துளசியும் நீரும் கொடுப்பதன் உண்மை என்னவெனில், துளசியில் ஓசோன் இருப்பதுதான். எனவே தமிழரின் வாழ்க்கை முறை அடிப்படையில் அறிவியல் சார்ந்ததாகும்.

********

# சளியையும் போக்கும், இதயமும் காக்கும்

ஒவ்வாமையினால் ஏற்படும் சளி உள்ளிட்ட சுவாசப் பிரச்சனைகளுக்கு முசுமுசுக்கை நண்பன். இருமல் - இரைப்பு – காசநோய், பித்த தலைவலிக்கும் முசுமுசுக்கை சூரணம் (தூள்) நல்ல மருந்து. உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை தரக்கூடியது. நீராக ஒழுகும் மூக்கைச் சரிபடுத்தும் ஆற்றல் முசுமுசுக்கை சூரணத்துக்கு உண்டு. இந்த சூரணம் உயர் ரத்த அழுத்த நோயாளிகளின் நண்பன். இந்த சூரணத்தைத் தொடர்ந்து சாப்பிடும் நிலையில் ரத்த அழுத்தம் இயல்பான அளவுக்கு வரும்.

தெகுத்தளித்தவர்
திரு. எம்.பி.வி. ஜெயக்குமார்.